பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 09 | திங்கட்கிழமை | 25.12.2023 | கதிர் 409

# பெரும்புள்ளிகள் மாட்டாத கைதுகளால் பொலிஸார் சொல்ல முயல்வது என்ன?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

**பெரும்புள்ளிகள் அகப்படாத சுற்றிவளைப்புக்கள் மூலமாக அமைச்சர் டிரான் அலஸும், பொலிஸாரும் வெளிப்படுத்த முனைவது என்ன என்று ஜன நாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**அத்துடன், போராட்டங்கள் காரணமாகவே பொலிஸார் போதைப்பொருள் கடத்தல் காரர்களையும், பாதாள உலக குழுவினரையும் கட்டுப்படுத்த முடியாது போனதென்ற அமைச்சர்டிரானின்கருத்தினை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும்அவர்குறிப்பிட்டார்.** ☞2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் காலத்திற்குக் காலம் புதுப் புதுவிதமான மோசடிகள் இடம்பெறுவது வழமை. மோசடிக்காரர்கள் 'டிரென்ட்'டுக்கு ஏற்ப தமது மோசடிகளையும் 'அப்டேட்' பண்ணி வருகின்றார்கள். ஒருபுறத்தில் திருட்டு, கொள்ளை, வழிப்பறி என்பன அதிகரித்து வரும் நிலையில் மறுபுறத்தில் நூதனமான ஏமாற்று வேலைகளும் அதிகரித்துவருகின்றன.

பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பியவர்களிடம் லட்சக் கணக்கில் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பாமல் ஏமாற்றிய சம்பவங்களும் அதிகரித்த நிலையில், இப்போது ☞2

## குடாநாட்டில் 130 பேர் டெங்கால் பாதிப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று மதியம் வரையான நிலவரப்படி 130 பேர் டெங்கு காய்ச்சல் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலைவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கின்றமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தற்காலிகமான இரண்டு விடுதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு சில வாரங்களாக அதிகரித்த அளவில் டெங்கு ☞2

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு நீதி கிட்டவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் நத்தார் செய்தி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் நீதி கிடைக்காத்ததாலும், குற்றவாளிகள் அடையாளம் காணப்படாததாலும், பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.ஈஸ்டர்தாக்குதலில் குற்றவாளிகள் அடையாளம்காணப்பட்டுபாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும் எனஎதிர்க்கட்சிதலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

கிருஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வெளியிட்டுள்ளவாழ்த்து செய்திலேயேஎதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். எதிர்க்கட்சி தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

'அமைதியன் அரசர்' என்ற கௌரவப் பெயர் பெற்ற இயேசு கிறிஸ்துவின் அற்புதமான பிறப்பின் சிறப்புத் தினத்தை நினைவு கூறும் நத்தார் தினம் இன்றாகும்.

தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பியதன் மூலம், தேவனுடைய ராஜ்யத்தின் மதிப்புகள் பூமியில் மீண்டும்வாழவேண்டும் என்ற ஆண்டவர் எதிர்பார்த்தார்.இருண்ட இதயங்களுக்கு கிறிஸ்து நித்திய ஒளியைக் கொண்டுவந்தார். பகிர்வு என்ற அற்புத மான பாடத்தை உலகுக் குக் கற்றுத் தந்த அற்புத மான நத்தார் பண்டிகையை,கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி, இன,மத வேறுபாடின்றி ☞2

## சவால்களை அறிந்து பொறுப்பை நிறைவேற்ற ஒன்றுபட வேண்டும்

### நத்தார் தினத்தில் ஜனாதிபதி அழைப்பு

நாட்டின் நமக்கிருக்கும் சவால்களின் உண்மைத்தன்மையை அறிந்துகொண்டு, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அனைவரும்ஒன்றுபடவேண்டுமென நத்தார் பண்டிகையையொட்டி அழைப்புவிடுத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின்.

கிறிஸ்மஸ் என்பது எதிர்பார்ப்புக்களின் திரு நாளாகும். 'கண்ணீருடன் இருளில் சென்ற மக்களுக்கு ஒளி கிட்டியது' அந்த ☞2

## மலையக மக்களுக்கு உரிய கௌரவம் கிடைக்கவில்லை

### எதிர்க் கட்சித் தலைவர் உருக்கம்

மலையக மக்களுக்கு கிடைக்க வேண்டியுள்ள உரிய கௌரவவும் இன்னமும் கிடைக்கவில்லை என்பதே எனது நிலைப்பாடாகும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நுவரெலிய மாவட்டத்தில் மலையகம் 200 நிகழ்வு நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

## நத்தாரை முன்னிட்டு இன்று 1004 கைதிகளுக்கு விடுதலை

நத்தார் பண்டிகையை முன்னிட்டு 1,004 கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைதகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

பல்லேகல சிறைச்சாலையில் இருந்து 162 பேரும், வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து 42 பேரும், மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 47 பேரும்திருகோணமலை சிறைச்சாலையில்இருந்து 12 பேரும், வவுனியா சிறைச்சாலையில் இருந்து 25 பேரும், யாழ்ப்பாண சிறைச்சாலையில் இருந்து 16 பேரும் இவ்வாறு ☞2

## பண்டிகையை முன்னிட்டு கைதுகளுக்கு மட்டுப்பாடு

பண்டிகைகாலத்தை கருத்தில்கொண்டு யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகபொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றையதினம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிறிஸ்தவ தேவாலயங்களை அண்மித்த பகுதிகளில் பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள காரணத்தினால் தற்காலிகமாக யுக்திய சுற்றிவளைப்புநடவடிக்கைகளைமட்டுப்படுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பொதுமக்களிடம்இருந்து கிடைக்கப்பெறும் தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கு ☞8

## ஜனாதிபதித் தேர்தலில் தமிழரை நிறுத்தி எம் ஒற்றுமையைக் காண்பிக்கவேண்டும்

### ஜனா எம்.பியின் ஆசை இது

ஜனாதிபதிதேர்தலில் தமிழர்கள் ஒன்றாக இருக்கவேண்டும். விசேடமாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் நன்றாக அறிந்த ஒரு தமிழரை நிறுத்தி எங்களது ஒற்றுமையைக் காண்பிக்க வேண்டும் என்று ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ☞8

## யாழ். மரியன்னை பேராலயத்தில் நள்ளிரவு நத்தார் சிறப்புத் திருப்பலி



கிறிஸ்மஸ் தினத்தையொட்டி யாழ் மரியன்னைபேராலயத்தில் நத்தார் விசேட திருப்பலிநள்ளிரவுஒப்புக் கொடுக்கப்பட்டது.

ஆலயத்தில் அமைக்கப்பட்ட இயேசு பாலன் பிறப்பைவெளிப்படுத்தும் பாலன் குடிலுக்கு ஆயர்களால் ஒளியேற்றப்பட்டது.

தொடர்ந்து யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் பேரனாட் ஞானப்பிரகாசத்தினால் நத்தார் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நத்தார் விசேட திருப்பலிநிகழ்வில் ☞2

## அதிவேக நெடுஞ்சாலைகளிலிருந்து அதிரடிப்படையை நீக்கப் பரிசீலனை

நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள விசேட அதிரடிப் படையினரின் பணிகள் மற்றும் அது குறித்த பிரச்சினைகள் தொடர்பிலும், அவர்களை அந்தப் பணிகளில் இருந்து நீக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில்நடைபெற்ற கூட்டத்தில் இதுகுறித்து ஆராயப்பட்டது.

இலங்கை அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும்விபத்துக்களைக் குறைப்பதற்கும், ☞2

### முறைமை மாற்றத்தை விரும்பும் மக்களுக்கு

## தலைமைத்துவத்தினை வழங்க ஜே.வி.பி. தயார்

### லால்காந்த தெரிவிப்பு

மக்கள் முறைமை மாற்றத்துக்கு தயாராகின்றபோது அதற்கான தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு நாமும் தயராகவே உள்ளோம் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

பொது மக்கள் சந்திப்பையடுத்து நேற்றையதினம் ஊடகங்களுக்கு ☞2

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மைத்திரிக்கு மீண்டும் விருப்பம்

கட்சி தன்னைத் தெரிவு செய்தால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார் சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பிங்கிரியவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேற் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இணையத்தளம்ஊடானமுதலீடுகள் என்று ஒரு மோசடி அரங்கேறத் தொடங்கியுள்ளது.

இந்த மோசடிகள் தொடர்பாக யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன. இணையமூடாக முதலீடு செய்து குறுகிய காலத்தில் அதிக பணம் சம்பாதிக்க முடியும் என்று சமூக ஊடகங்கள் வாயிலாகப் பரப்பப்படும் விளம்பரங்களுக்கு மயங்குபவர்கள்தான் இந்த மோசடிக்காரர்களின் இலக்கு.

விளம்பரங்களைப் பார்த்து ஆசைப்பட்டு வருபவர்களை நம்ப வைப்பதற்காக முதலில் சிறு முதலீடு ஒன்றைச் செய்யும்படி கேட்கிறார்கள். சிறுதொகைப் பணத்தை முதலிட்டால் அதற்கான 'போனஸ்' மற்றும் லாபம் என்று அதனை இரு மடங்காகத் திருப்பித் தருகின்றார்கள். பின்னர் ஆசை காட்டி தொடர்ந்து முதலீடுகளைச் சற்று அதிகரிக்கச் செய்கிறார்கள்.

ஒரு கட்டத்தில் இப்படிச் சிறு சிறு தொகையாக முதலிட்டு எப்போது பணம் பார்க்கப் போகிறீர்கள்? பெருந்தொகையை முதலிட்டால் ஒரு தடவையில் பணத்தை அள்ளிவிடலாம் என்று ஆசை வார்த்தைகாட்டி மயக்குகிறார்கள். ஏற்கனவே பலதடவைகள் இலாபம் தந்திருக்கிறார்கள்தானே என்கிற நம்பிக்கையில் அவர்களும் கடனைவாங்கி பெருந்தொகையை முதலிடுகிறார்கள்.

அதற்குப்பின்னர் அந்த இணைய முதலீட்டாளர்களுடன்ஒருதொடர்பும் இருக்காது. அவர்கள் மாயமாகி இருப்பார்கள். அவர்கள் யார், அவர்களின் உண்மையான விவரங்கள் என்ன என்பது குறித்து காசை இழந்தவருக்கு எந்தத் தகவலும் தெரிந்திருக்காது. இப்படி எந்த விவரமும் இன்றி பொலிஸாரிடம் முறையிடச் சென்றால் அவர்கள் தம்மால் எதுவும் செய்ய முடியாது என்று கைவிரிக்கிறார்கள்.

இதுபோன்ற மோசடிகளால் 50 லட்சம் ரூபாய் வரை இழந்தவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டிருக்கிறார்கள். இது தொடர்பில் யாருக்கெதிராக நடவடிக்கை எடுப்பது என்று தெரியாத பொலிஸாரும் இதனை இணையத்தள குற்ற விசாரணைப் பிரிவினருக்கு அறிவித்துள்ளனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பெரும்புள்ளிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் அவர் நேற்றையதினம் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது:

போராட்டங்கள் காரணமாக பொலிஸாரால் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், பாவனையாளர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியவில்லை. அத்துடன், பாதாள உலக குழுவினரையும் கட்டுப்படுத்த முடிவில்லை என்று விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர்டிரான்அலஸ்கூறுகின்றார்.

ஆனால், தற்போது பெருந்தொகையான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், போதைப்பொருட்களுடன் தொடர்புபட்டவர்கள் தொடர்பில் தகவல்களும் உள்ள நிலையில் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில்,போதைப்பொருள் கடத்தல்காரர்கள், விநியோகத்தர்கள், பயன்படுத்துபவர்கள் தொடர்பில் பொலிஸார் பல தகவல்களை வெளியிடுகின்றார்கள். பாதாள உலகக்குழுவினரின் பெயர்ப் பட்டியலைக் கொண்டிருப்பதாகவும் கூறுகின்றார்கள்.

இவ்வாறானநிலையில்இவர்களை மையப்படுத்தி ஏன் இதுவரையில் தீவிரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. தற்போது,விசேடவேலைத்திட்டத்தின் ஊடாக சாதனை செய்துவிட்டதாக படங்காண்பிக்கப்படுவதன்நோக்கம் என்ன என்ற கேள்விகள் அதிகமாக உள்ளன.

மேலும், தற்போது கைது செய்யப்பட்டவர்கள் எவரும், பிராதன புள்ளிகள் அல்லர். அவர்கள் சாதாரண பாவனையாளர்கள் மூன்றாம் நிலை விநியோகததர்கள் மட்டுமே கைதாகியுள்ளனர். இந்த நிலைமைஎதிர்காலத்தில்நீடிப்பதற்கு அனுமதி அளிக்க முடியாது என்றார்.

## டெங்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளிகள் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட்டு டெங்கு காய்ச்சல் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு சுகாதார தரப்புக்கள் எச்சரிக்கை விடுத்து வருகின்றன.

## சவால்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்ப்புக்களைப் புதுப்பிப்பதற்கான கடமை மற்றும் பொறுப் புக்களை நிறைவேற்றி அனைவருக்கும் புதிய எதிர்பார்ப்புக்களைதோற்றுவிக்கும்திருநாளாக இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகை அமைய பிரார்த்திப்போம்.

'வறியவர்களுடன் ஒரு வேளை உண்ணுங்கள்' என்ற விடயத்தை முன் நிறுத்தி, மாட்டு தொழுவத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவைக் கொண்டாடும் நாம், ஒருபோதும் யதார்த்தத்தை மறக்க கூடாது.

மானிடர்களைப் பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காக சிலுவையில் உயிர் தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்ந்து கிறிஸ்தவர்கள் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். தம்மை எதிர்ப்பவர்களையும், தமக்கு இடையூறு செய்வோரையும் மன்னித்து அவர்கள் மீதான கோபத்தையும், வெறுப்பையும் போக்கிக் கொள்ளுமாறு கிறிஸ்தவ மதம் நமக்கு கற்பிக்கிறது.

கிறிஸ்மஸ் கொண்டாத்தினால் சிறந்த மாற்றங்கள் கிடைக்கும். அவ்வாறான மாற்றங்கள் உளப்பூர்வமானதும் உண்மையானாதுமாக இல்லாத போது கிறிஸ்மஸ் கொண்டாட்டம்அர்த்தமற்றாகிவிடும்.

பல்வேறு சவால்கள் நம்முன் நிற்கின்ற தருணத்தில், நாம் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடுகின்றோம். நாட்டின் நமக்கிருக்கும் சவால்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொண்டு, பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகஅனைவரும் ஒன்றுபட வேண்டுமென அழைப்பு விடுக்கும் அதேநேரம், உலக மக்கள் அனைவருக்கும் அன்பும், அமைதியும்நிறைந்தபண்டிகையாக இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகை அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவரது கிறிஸ்மஸ்/ நத்தார் வாழத்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிவேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்போது செயல்படவும் குற்றங்களைத் தடுப்பதற்கும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அந்த பணிகளிலிருந்து விசேட அதிரடிப் படையினரை நீக்கி, அந்த பணிகளை முன்னெடுப்பதற்கான மாற்றுவழி தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இதற்காக முன்வைக்கப்பட்ட பல்வேறு யோசனைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், இந்த பணிகளைப் பொறுப்புடன், உரிய வகையில் முன்னெடுப்பதற்கும், இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்யக்கூடியதுமான சரியான வேலைத்திட்டம் ஒன்றை பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் விரைவில் உருவாக்குமாறு சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள்உள்ளிட்டபலரும்இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது நாட்டில் அனைவரும் சமமாகமதிக்கப்படவேண்டும்என்று அரசமைப்பில்குறிப்பிடப்பட்டுள்ளது. பெருந்தோட்ட, மலைய மக்களுக்கு கிடைக்க வேண்டியுள்ள உரிய கௌரவவும் இன்னமும் கிடைக்கவில்லை என்பதே எனது நிலைப்பாடாகும். மலையக மக்களுக்கான பிரஜாவுரிமையை எனது தந்தையாரான ரணசிங்க பிரேமதாசவே பெற்றுக்கொடுத்தார் என்பதைநினைவுபடுத்துகின்றேன்.

எதிர்காலத்தில் எமது ஆட்சியின் கீழ், மலையக மக்களின் வாழும் உரிமையை பூரணப்படுத்துவேன் காணி உரிமையை இல்லாதவர்களுக்கும் விசேட நடவடிக்கைகள் முன்னெடுப்பதம் அவசியமாகின்றது என்றார்.

## தலைமைத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு சுதந்திரமடைந்து 75ஆண்டுகளுக்குப் பின்னரான காலத்தில் ஒரு முறைமை மாற்றம் அவசியம் என்பதை வலியுறுத்த ஆரம்பித்துள்ளார்கள். இதன் மூலமாகவே நாட்டிற்கான எதிர்காலம் உள்ளதாகஅவர்கள்நம்புகின்றார்கள்.

அந்த வகையில்,தற்போது பல ஆய்வகளின் அடிப்படையில் எமது கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவே முன்னிலையில் உள்ளார். ஆகவேமக்கள்முறைமை மாற்றத்துக்கு தயாராகின்றபோது அதற்கான தலைமைத்துவத்தினை வழங்குவதற்கு நாமும் தயராகவே உள்ளோம் என்றார்.

## நத்தாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

நாட்டின் சகல சிறைச்சாலைகளையும் உள்ளடக்கிய வகையில் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் இவர்கள்இன்றையதினம்விடுதலை செய்யப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

## உயிர்த்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக மக்கள் பலரும் கொண்டாடி வருகின்றனர்.

அன்பும்,ஆதரவும்,அமைதியும், சமாதானமும்,சமத்துவமும் நிறைந்த உலகைப் படைக்க இயசு தனது அன்பின் கரங்களை நீட்டி,துயரங்கள் நிறைந்த இதயங்களைஅமைதிப்படுத்தினார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உலகலாவிய கிறிஸ்தவர்கள் டிசம்பர் மாதத்தில் நத்தார் தினத்தை தேவாலய மணிகள் அடித்தும், இயேசுவின்பிறப்பைக்கொண்டாடும் மெழுகுவர்த்தி வழிபாடுகளுடனும் கொண்டாடுகிறார்கள். இயசு கிறிஸ்து கொண்டி வந்த அன்பு, சகோதரத்துவம்,ஏழைகளுக்கு உதவுதல் என்ற செய்தியில் வாழ்ந்தால் மட்டுமே நத்தார் மகிழ்ச்சி தரும்.

சிறிய குடிசைகள் முதல் பெரிய வீடுகள் வரை மக்கள் தங்களால் இயன்ற விதத்தில் நத்தார் பெருவிழாவைக் கொண்டாடுகின்றனர்.'நல்லவன் தன் இதயத்தில் பொக்கிஷமாக வைத்த நன்மையை விதைப்பான்,தீயவன் தன் இருதயத்தில் பொக்கிஷமாக வைத்த தீமையை விதைப்பான்' என்று பைபிள் சொல்கிறது.நன்மையும் மனித நேயமும் நிறைந்த ஒரு நாட்டுக்காக உலகிற்காக நம்மை அர்பபணிக்க இயேசு வழி காட்டியுள்ளார் என்பதை இது தெளிவாக்குகிறது.

பல வருடங்களாக இலங்கை கிறிஸ்தவ மக்கள் ஈஸ்டர் மற்றும் நத்தார் பண்டிகைகளை ஒன்றாகக் அனுபவிக்கும் சூழ்நிலையில் உள்ளனர்.பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்காததாலும்,குற்றவாளிகள் அடையாளம் காணப்படாததாலும், பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.ஈஸ்டர் தாக்குதலில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

நத்தார் செய்தி பூமியில் உள்ள அனைத்து மக்களுக்கும் அமைதி உண்டாவதக என்பதாகும்.விடுதலைச் செய்தியை உலகிற்கு எடுத்துரைத்து,நத்தாரின் உண்மையானஅர்த்தத்தைஎடுத்துக் காட்டும் மகிழ்ச்சியும்,அமைதியும் நிறைந்த நத்தார் பெருவிழாவாக அமைய நல்வாழ்த்துக்கள் - என்றுள்ளது.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



யாழ் மறை மாவட்ட குரு முதல்வர், அருட் தந்தையர்கள் ,வடமாகாண ஆளுநர், மற்றும் பெருமளவிலான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# 15 மாதங்களில் 45 சட்டங்களில் திருத்தம் மேற்கொண்டுள்ளோம்

## நீதி அமைச்சர் பெருமிதம்



நாட்டை பொறுபேற்று கடந்த 15 மாதங்களில் நாட்டின் நல்வாழ்வுக்குத் தேவையான சுமார் 45 சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை புதுப்பித்திருக்கிறோம். எதிர்காலத்திலும் இந்தநடவடிக்கையை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இந்த சமூகம் அனைத்துதுறைகளிலும் சீரழிந்துவிட்டது, இது ஓரிரு நாளில் நடந்ததல்ல. சமூக ஒளிபரப்பில் நீண்ட நாள்களாக நடந்து வந்த ஒன்று. தற்போது உச்சத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையை மாற்றியமைக்கவே எங்களுக்குத்; தேவையாக இருக்கிறது.அதனால் நாங்கள் நாட்டை பொறுபேற்று கடந்த 15 மாதங்களில் நாட்டின் நல்வாழ்வுக்குத் தேவையான சுமார் 45 சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை புதுப்பித்திருக்கிறோம் எதிர்காலத்திலும் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

கிராமமும் கோயிலும் என்ற கருத்து இப்போது மாறிவிட்டது. மற்ற மதங்களிலும் அப்படித்தான், பணத்தின் அடிப்படையிலான சமுதாயம் தான் இந்தக் காலத்தில் உருவாகி இருக்கிறது.

போதைப்பொருள் சமூகத்தை கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. இந்த சமூகத்தை நாங்கள் நல்வழிக்கு கொண்டுவர வேண்டும். அதனால்தான் நீதி அமைச்சு என்ற வகையில், சமூகத்தின் நல்வாழ்வுக்குத் தேவையான அடித்தளத்தை அமைத்து வருகின்றோம். அதன் ஒரு கட்டமாக , சமுதாயத்திற்காக உழைக்கும் முன்மாதிரியான மற்றும் பொறுப்பான நபர்களுக்கு சமாதான நீதிவான் பதவிகளை வழங்க நாங்கள் தீர்மானித்தோம்.

1978 நீதிமன்ற அமைப்பு சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு மாவட்ட நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதுபோன்று, நீதி அமைச்சருக்கு சமாதான நீதிவான்களை நியமிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நியமனங்களை நாங்கள் கண்டபடி வழங்க மாட்டோம்.

என்றாலும் கடந்த காலங்களில் தேவையற்ற நபர்களுக்கும் சமாதான நீதிவான் நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறான நபர்கள் சிலரின் நியமனங்களை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுத்தோம். -என்றார். (05)

# சிறைச்சாலை கைதிகளில் 53 வீதமானவர்கள் போதைப்பொருள்களுடன் சம்பந்தப்பட்டோர்

## கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தல்

2022 ஆம் ஆண்டில் சிறைப்படுத்தப்பட்ட கைதிகளில் நூற்றுக்கு 53 வீதமானவர்கள் போதைப்பொருளுடன் சம்பந்தப்பட்டவர்கள். அதாவது 13794 கைதிகள் சிறைப்படுத்தப்பட்டிருப்பது போதைப்பொருளுடன் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காகும் என தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டிருக்கும் புதிய கணக்காய்வு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் கடந்த 2022ஆம்ஆண்டில் 26176 கைதிகள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர். போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாகசிறைப்படுத்தப்பட்டகைதிகளில் 4406பேர் சிறைக்கைதிகள் என்பதுடன் 9388பேர் சந்தேக நபர்களாகும்.

அத்துடன்சிறைச்சாலைகளுக்குள் இருந்துவரும் கடும் நெரிசலுக்கு போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் காரணமாக சிறைப்படுத்தப்படுபவர்கள் அதிகரிப்பது பிரதான காரணமாக அமைந்துள்ளது.

சிறைச்சாலைகளின் பிரதான நோக்கத்தை நெருங்குவதற்கும் சிறைச்சாலைகளின் உள்ளக பாதுகாப்பு மற்றும் செயற்பாடுகளுக்குஇந்தநிலைமை இடையூறாக இருப்பதாகவும் குறித்தகணக்காய்வுஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# மன்னார் மாவட்ட அரச அதிபராக பொறுப்பேற்றார் கனகேஸ்வரன்



வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக க.கனகேஸ்வரன் அவர்கள் கடமையாற்றிய நிலையில் சனிக்கிழமை மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்

கடந்த 21 திகதி பொது நிர்வாகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோகவிடமிருந்து நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்ட க.கனகேஸ்வரன் சனிக்கிஶ்ரீழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் காலை 9 மணியளவில் உத்தியோகபூர்வமாக கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அதனைத் தொடர்ந்து புதிய அரச அதிபரை வரவேற்கும் நிகழ்வு மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வின் மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், பிரதேச செயளாலர்கள் உட்பட திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகஸ்தர்கள், மதத்தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த புதிய அரசாங்க அதிபர் -

மன்னார் மாவட்டத்தில் தீர்க்கப்படாமல் காணப்படும் காணிவிடுவிப்பு, சட்டவிரோத மணல் அகழ்வு, சுற்றுசூழல் பிரச்சினை, கழிவகற்றல் ,வனஜீவரசிகள் திணைக்களம் மற்றும் வனவள திணைக்களத்தின் கீழ் காணப்படும் காணிகளை விடுவிக்கும் விடயங்களை முன்னிலைப்படுத்தி செயற்பட உள்ளதாகவும் அதே நேரம் மாவட்ட அபிவிருத்தி விடயங்களை துரிதப்படுத்தி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதாகவும் தெரிவித்தார். (05)

# தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய இறுதித் தீர்வு இந்திய இலங்கை ஒப்பந்தப்படி வழங்கவில்லை

## சந்தோஷ் ஜாவிடம் கஜேந்திரகுமார் இடித்துரைப்பு



இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க இறுதித்தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்ற உண்மையை இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டுசென்று, அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் சந்தோஷ் ஜா, வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தனது நற்சான்றுப் பத்திரத்தைக் கையளித்தார்.

அதுமாத்திரமன்றி அங்கு கருத்து வெளியிட்ட அவர், இந்திய - இலங்கை வரலாற்று நட்பை மேலும் பலப்படுத்தவும், வர்த்தக, முதலீட்டு, வலுசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நிலவும் நெருங்கிய ஒத்துழைப்பை மேம்படுத்திக்கொள்ளவும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்துரைத்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவரது பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு வாழ்த்துவதாகக் குறிப்பிட்டார்.

இருப்பினும் கடந்த காலத்தில் தமிழர் பிரச்சினைக்கு நிலையான இறுதித்தீர்வொன்றைக் கண்டடைவதை முன்னிறுத்தியே இருநாடுகளுக்கும் இடையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது எனவும், அதில் இந்தியாவின் நலன்களும் தங்கியிருந்தன எனவும் தெரிவித்த அவர், இருப்பினும் அவ்வொப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். எனவே இந்த உண்மையை புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டுசெல்லவேண்டும் எனவும், அதனூடாக ஆகக்குறைந்தது தமிழர் பிரச்சினைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியவகையிலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் எனவும் கஜேந்திரகுமார் மேலும் வலியுறுத்தினார். (05)

# தேங்காய் எண்ணெய் வாங்கச்சென்ற இளைஞன் படியில் வழுக்கி வீழ்ந்து போத்தல் குத்திச் சாவு

நாவலப்பிட்டி பிரதேசத்தில் வீட்டிற்குத் தேவையான தேங்காய் எண்ணெய்யை வாங்க சென்ற இளைஞர் படியில் வழுக்கி வீழ்ந்ததில் கண்ணாடி போத்தல் உடைந்து குத்தப்பட்டு காயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நாவலபிட்டி பிரதேசத்தை சேர்ந்த 20 வயதுடைய நபராவார்.

இவர் சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் வீட்டிற்கு தேவையான தேங்காய் எண்ணெய்யை வாங்குவதற்காக கடைக்கு செல்லும் போது வீட்டிற்கு அருகிலுள்ள படியில் வழுக்கி வீழ்ந்து கையில் இருந்த கண்ணாடி போத்தல் உடைந்து கழுத்தில் குத்தப்பட்டு காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப்பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மனைவியுடன் ஏற்பட்ட தகராறில் வீட்டுக்குத் தீ வைத்த கணவன்

கணவன் மனைவிக்கு இடையிலான தகராறில் எல்லை மீறிய கணவர் தீ வைத்து வீட்டை கொளுத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம்-ஆராச்சிக்கட்டுவபிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன்-மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் எல்லை மீறியதில் கோபமடைந்த கணவர் தீ வைத்து வீட்டைக் கொளுத்தியுள்ளார்.

இந்த சம்பவத்தில் வீட்டில் உள்ள பொருள்கள் சேதமடைந்துள்ளதோடு, உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 600 போலி சாரதி பயிற்சி நிலையங்கள்

நாடு முழுவதிலும் சுமார் 600 போலி சாரதி பயிற்சி நிலையங்கள் காணப்படுகின்றன என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இயங்கி வரும் 1200 சாரதி பயிற்சி நிலையங்களில் 600 போலியானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படாது இந்த பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார்போக்குவரத்துதிணைக்களத்தின் அனுமதி

இவ்வாறுபோலியாகஇயங்கிவரும் போலி சாரதி பயிற்சி நிலையங்கள் தொடர்பில் மாவட்ட மோட்டார் போக்குவரத்து பரிசோதகர்களுக்கு தெரியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைமோட்டார்போக்குவரத்து திணைக்களத்தின் அனுமதியுடன் இயங்கிவரும்பயிற்சிநிலையங்களின் எண்ணிக்கை 600 எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனுமதி பெற்றுக்கொண்ட பயிற்சி நிலையங்களின் பயிற்றுவிப்பாளர்களுக்கு பரீட்சை நடத்தப்படுவதாகவும், பயிற்சி வழங்கப்படுவதாகவும் மோட்டார் போக்குவரத்துதிணைக்களத்தின்உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (05)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமைதியின் பிறப்பான யேசுவின் பிறப்பு

மலர் மணத்தைச் சந்திப்பதுண்டு
வானம் நிலவைச் சந்திப்பதுண்டு
நிலம் நீரைச் சந்திப்பதுண்டு
கடல் கரையைச் சந்திப்பதுண்டு
மயில் மழையைச் சந்திப்பதுண்டு
குயில் சோலையைச் சந்திப்பதுண்டு

இவையாவும் அழகான சந்திப்புகள்தான். ஆனால் இவற்றைவிட ஓர் அற்புதமான சந்திப்பு ஒன்று நம் நடுவே நிகழப்போகிறது. விண்ணகம் மண்ணகத்தை சந்திக்கப்போகிறது. பாசம் பகையைச் சந்திக்கப்போகிறது. ஆம்! கடவுள் மனிதனை சந்திக்கப் போகிறார். கிறிஸ்து பிறப்பிற்காக நம்மையே தயாரிக்கும் காலம் முடிந்து, காத்திருக்கும் கண்களுக்கு விருந்து படைக்க, இதோ மீட்பர் இயேசு பிறந்துவிட்டார்... வாருங்கள்.

இன்று கிறிஸ்மஸ் தினம். பாலகன் யேசு மக்களின்பாவங்களைச்சுமந்து அவர்களுக்கு விடுதலை வாங்கித் தருவதற்காக இந்தப் பூமியில்அவதரித்தநாள். கத்தோலிக்கர்களின் பெருவிழா. மனித வாழ்விலே சந்திப்புகள் பலவிதம். சில சந்திப்புகள் சந்தோசத்தை கொடுக்கின்றன. சிலசந்திப்புகள்சங்கடங்களை கொடுக்கின்றன. கண்களால் காண இயலாத கடவுள் கண்களால் காணும் வகையில் மனிதனாக, இயேசு பாலனாக மண்ணில் பிறந்த வரலாற்று நிகழ்வுதான் கிறிஸ்துமஸ் விழா.

கடவுள் மனித உரு எடுத்து நம்மிடையே பிறந்து வந்த மறைபொருளை அதிகமாக சிந்தித்து தியானித்துக் கொண்டிருக்கும் இக்கிறிஸ்து பிறப்புக் காலகட்டத்தில், நமக்கு அடுத்திருப்பவர்கள், தேவையில் இருப்பவர்களுக்கு உதவுவதன் வழியாக ஒவ்வொருவரும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வைக் கண்டறிந்து வாழ்வதற்கான வழிவகையை அறிந்து கொள்ள இறைவனின் அருளை வேண்டுவோம் என்று பாப்பரசர் கிறிஸ்மஸை ஒட்டியதனது பதிவுஒன்றில்தெரிவித்திருக்கிறார்.

உலகின் பல நாடுகளிலும் போராலும் ஆயுத மோதல்களாலும் துன்பப்பட்டுத் துயரப்பட்டு நிர்க்கதியாகிநிற்கும்மக்களுக்கும்பொருளாதார நெருக்கடியாலும் இன முரண்பாடுகளாலும் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கும் உதவும் வகையில் இன்றைய கிறிஸ்மஸ் தினத்தில் ஒவ்வொருவரும் நடந்துகொள்வது அவசியம்.

கிறஸ்மஸ் வசந்த காலத் தொடக்கத்தின் கொண்டாட்டமும்கூட, எனவே கொண்டாட்டம் அதன் ஒரு பகுதியாக இருப்பதைத் தவிர்க்க முடியாது. அதேநேரம் இல்லாதவர்களையும் இந்தக்கொண்டாட்டத்தில்சேர்த்துக்கொள்ளும் வகையிலும் பாதுகாப்பாகவும் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வகையிலும் அமைதியின் பிறப்பான யேசுவின் பிறப்பைக் கொண்டாடி மகிழ்வோம்.


அவரதுபிறப்புஎல்லோருக்கும்அமைதியையும் ஆற்றலையும் தருவதாக.



# செங்கடலில் தொடரும் கப்பல் கடத்தல்கள்

## இஸ்ரேலை எதிர்க்கும் யேமன் ஹவுதி கிளர்ச்சி படை!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



மத்திய கிழக்குப் பகுதியில் இஸ்ரேல்-ஹமாஸ் போர் இன்னமும் தொடர்கிறது. அதே வேளை செங்கடல் (Red Sea) பிராந்தியத்தில் அதிகரித்த பதட்டங்களால்சர்வதேசவணிககப்பல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

யேமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் கப்பல் வழித்தடத்தில் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட பல சரக்குக் கப்பல்களையும் கைப்பற்றி பல கடற்பணியாளர்களை பிணைக்கைதிகளாகக் கைப்பற்றி உள்ளனர்.

செங்கடல், எகிப்தின் சூயஸ் கால்வாயிலிருந்து அரேபிய தீபகற்பத்தை ஆபிரிக்காவில் இருந்துபிரிக்கும்நீரிணையாகும்.

இது உலகளாவிய கப்பல் மற்றும் எரிசக்தி விநியோகத்திற்கான முக்கிய வர்த்தக பாதையாக உள்ளது. அதனால்தான்அக்டோபர் 7 ஆம் தேதி இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து பல கப்பல்களை கடலில் பயணஞ் செய்வதை நிறுத்தியுள்ளது.

இதற்கிடையே லெபனான், ஈரான் உள்ளிட்ட நாடுகளில் இருக்கும் ஆயுத போராளிக் குழுக்களும் இஸ்ரேலுக்கு எதிரான தங்கள் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளன.



### இஸ்ரேலுக்கு எதிரான ஹவுதி

இஸ்ரேலுக்கு எதிரான போரில் தாங்களும் களமிறங்கியுள்ளதாக யேமன் நாட்டின் ஹவுதி கிளர்ச்சிக் குழு அண்மையில் அறிவித்துள்ளது.

சுனி இஸ்லாமிய நெறியை பினபற்றும் யேமன் (Yemen) அரசிற்கு எதிராக 1992ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது தான் ஹவுதி ஆயுதக்குழு.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராக இந்த இயக்கம் செயல்பட்டு வருகிறது.

யேமனில் வாழும் ஹவுதி பழங்குடியினரே இந்த அமைப்பில் பெரும்பாலும் உறுப்பினர்களாக உள்ளனர். ஷியா பிரிவு இஸ்லாமியர்களான ஹவுதிக்கள், சுனி பிரிவு இஸ்லாமியர்களை கொண்டுஅமைந்தயேமன்நாட்டு



அரசை எதிர்த்து நீதரடகாலமாக போராடி வருகின்றனர்.

அத்துடன் யேமனின் சிறு பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹவுதிக்கள் நாடு முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர போராடி வருகிறார்கள். ஹவுதிக்களுக்கு எதிரான யேமன் அரசு நடத்தும் சண்டைக்கு சவுதி அரேபியாவும் உதவி வருகிறது. இதன் காரணமாக சவுதி அரேபிய நகரங்களை கூட ஹவுதி ஆயுதக்குழுவினர் அவ்வப்போது ஏவுகணைகளை வீசி தாக்குவது உண்டு. ஷியா இஸ்லாமியர்கள் நிறைந்த ஈரானும் ஹவுதிக்களுக்கு ஆயுதம் மற்றும் நிதி உதவிகளை அளித்து வருவதாக தகவல்கள் உண்டு.

இந்த சூழலில்தான் இஸ்ரேலுக்கு எதிராகவும் தங்கள் போர் தொடங்கியுள்ளதாக ஹவுதிக்கள் அறிவித்துள்ளனர். ஹமாஸ் தவிர லெபனானிலிருந்து ஹிஸ்புல்லாக்கள், சிரியாவிலிருந்து ஈரான் ஆதரவு படைகள் இஸ்ரேலை தாக்கி வரும் நிலையில் ஹவுதிக்களும் தற்போது அதில் இணைந்து கொண்டுள்ளது.

இந்தபோர்மேலும்தீவிரமடையுமா என்ற கவலையை உலக நாடுகளுக்கு ஏற்படுத்தியுள்ளது. யேமனிலிருந்து சவுதி அரேபியா என்றபெரும்நிலப்பரப்பை கடந்து ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இஸ்ரேல் மீது

(5ஆம் பக்கம் பார்க்க...)





# செங்கடலில் தொடரும்.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ஹவுதிக்கள் தாக்கியது கவனத்தை ஈர்த்துள்ளது.

**இந்தியாவை நோக்கி வந்த கப்பல் கடத்தல்:**

யேமனில் உள்ள ஹவுதி குழு இந்தியாவுக்குச் சென்று கொண்டிருந்த சர்வதேச சரக்குக் கப்பலைப் பிடித்து வைத்துள்ளதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது. தெற்கு செங்கடல் பகுதியில் அந்த சரக்கு கப்பல் சென்று கொண்டிருந்த போது ஹவுதி குழு இதைக் கடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதை இஸ்ரேல் ஈரானின் பயங்கரவாத செயல் என்றும் உலக அளவில் பதற்றத்தை ஏற்படுத்தும் சம்பவம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

செங்கடலில் சென்று கொண்டிருந்த நிலையில், ஹெலிகாப்டர் மூலம் ஹவுதி படை தனது வீரர்களை அதில் இறக்கி, அதன் மூலம் கப்பலைக் கடத்திச் சென்றுள்ளனர்.



பிரிட்டன் நிறுவனத்திற்குச் சொந்தமான அந்த கப்பலை ஜப்பான் நிறுவனத்தால் இயக்கப்படுவதாக இஸ்ரேல் கூறுகிறது. அந்த கப்பலில் உக்ரைன், பல்கேரியன், பிலிப்பைன்ஸ் மற்றும் மெக்சிகோ என பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 25 பணியாளர்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

அந்த சரக்கு கப்பலை ஹவுதி படை கடத்தியதை உறுதி செய்துள்ளனர்.

இந்தியாவுக்கு வந்த சர்வதேச சரக்கு கப்பல் கடத்தப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஹவுதி படை முன்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் இஸ்ரேல் நிறுவனம் அல்லது இஸ்ரேல் கொடியுடன் இருக்கும் அனைத்து கப்பல்களையும் குறிவைத்துக் கடத்துவோம் என்று எச்சரித்திருந்தது. அதன்படி இந்த கடத்தப்பட்ட கப்பலும் இஸ்ரேலுக்கு சொந்தமானது தான் என்று ஹவுதி கூறியுள்ளது.

**இஸ்ரேல் கப்பல் கடத்தல்:**

நவம்பர் 21, 2023இல் இஸ்ரேல் சரக்கு கப்பல் கடத்தலுக்கும் ஹவுதி படைகள் பொறுப்பேற்பு கொண்டனர். துருக்கியில் இருந்து கேலக்ஸி லீடர் என்ற சரக்கு கப்பல் இந்தியா நோக்கி வந்து கொண்டிருந்தது. இதில் இஸ்ரேலியர்கள் உள்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த சுமார் 52 பணியாளர்கள் பயணம் செய்தனர்.

இந்த கப்பல் யேமன் அருகே செங்கடல் பகுதிக்கு வந்த போது திடீரென காணாமல் போனது.

இந்த கப்பலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடத்தி இருக்க கூடும் என்று இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. மேலும் இதுகுறித்து இஸ்ரேல் கூறுகையில், இது இஸ்ரேல் நாட்டிற்கு சொந்தமான கப்பல் இல்லை என்றும் ஆபிரகாம் உங்கர் என்ற இஸ்ரேலிய தொழிலதிபருக்கு சொந்தமானது என்றும் விளக்கம் அளித்துள்ளது.

கப்பலின் ஜப்பானிய ஆபரேட்டர், ஹிகூஷூலு லைன் கடத்தப்பட்ட நேரத்தில் கப்பலில் சரக்கு எதுவும் இல்லை என்று கூறினார். அதன் பணியாளர்கள் பிலிப்பைன்ஸ், பல்கேரியா, ருமேனியா, உக்ரைன் மற்றும் மெக்சிகோவைச் சேர்ந்தவர்கள் என்று ஹிகூஷூலு நிறுவனம் தெரிவித்துள்ளது.






**ஈரான் மீது குற்றச்சாட்டு:**

2019 முதல், ஈரான் உலக வல்லரசுகளுடனான அணுசக்தி ஒப்பந்தத்தின் அனைத்து வரம்புகளையும் உடைக்கத் தொடங்கி உள்ளது. சர்வதேசக் கடலில் தொடர்ச்சியான கப்பல்கள் கடத்தலுக்கும், தாக்குதலுக்கும் ஈரான் மீதான குற்றச்சாட்டும் உள்ளது.

செங்கடல் கடற்பரப்பில் இஸ்ரேலிய கப்பல்களை குறிவைப்பதாக யேமன் ஹவுதிகள் பலமுறை மிரட்டல் விடுத்துள்ளனர். இத்தகைய தாக்குதல்கள் ஈரான் அரசு ஆதரிக்கின்றது என்றும், அதே போல் யேமனில் உள்ள ஹவுதிகளின் நிலைப்பாட்டை வலுப்படுத்துகின்றன என்றும் கூறப்படுகிறது.

**யேமனில் இருந்து ஏவுகணை:**

கடந்த மாதத்தில் இரண்டு முறை, அமெரிக்க போர்க்கப்பல்கள் யேமனில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் அல்லது ட்ரோன்களை இடைமறித்துள்ளன. அவை இஸ்ரேலை நோக்கிச் செல்லும் அல்லது அமெரிக்க கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக இருந்ததாக நம்பப்படுகிறது. நவம்பர் மாதம் வடக்கு செங்கடலை நோக்கி ஹவுதி படைகளால் ஏவப்பட்ட மூன்று தரைவழி தாக்குதல் ஏவுகணைகள் மற்றும் பல ஆளில்லா விமானங்களை கடற்படை அழிக்கும் கப்பலான யுஎஸ்எஸ் கார்னி இடைமறித்தது. அதன்பின்

நவம்பர் 15 அன்று மற்றொரு அமெரிக்க நாசகார கப்பலான யுஎஸ்எஸ் தாமஸ் ஹட்னர்

யேமனில் இருந்து வந்ததாகக் கூறப்படும் ஆளில்லா விமானத்தை

தண்ணீருக்கு மேல் சுட்டு வீழ்த்தினர்.

அமெரிக்க பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய குழுவினர் நடவடிக்கை எடுத்ததாகவும், கப்பலுக்கு எந்த உயிரிழப்பும் அல்லது சேதமும் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செங்கடலில் தொடரும் கப்பல் கடத்தல்களால், சர்வதேச வணிக கப்பல் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. அதே வேளை

இஸ்ரேலை எதிர்க்கும் யேமன் ஹவுதி கிளர்ச்சி படைகளால் இந்த போர் மேலும் தீவிரமடையுமா என்ற கவலையை உலக நாடுகளுக்கு ஏற்படுத்தியுள்ளது.

யேமனிலிருந்து சவுதி அரேபியாவின் பெரும் நிலப்பரப்பை கடந்து ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இஸ்ரேல் மீது ஏவுகணைகளால் ஹவுதிக்கள் தாக்கியதும் இராணுவ ஆய்வாளர்கள் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chinese Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# 13 திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கூட்டமைப்பினரின் வலியுறுத்தல் வரவேற்கத்தக்கதே

## ஈ.பி.டி.பி. ரங்கன் தெரிவிப்பு




ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்திருப்பதை வரவேற்பதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

ஜனாதிபதிமற்றும்வடக்குகிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது.

குறித்த சந்திப்பில் நல்லிணக்கம், காணி, மீள் குடியமர்தல், தமிழக அகதிமுகாமில் இருக்கும் இலங்கையர்களின் பிரச்சினைகள், அரசியல் தீர்வு விடயங்கள், வடக்கு -கிழக்கின் அபிவிருத்தி தொடர்பில் ஆராயப்பட்டபோது இலங்கை இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் தமிழ்த் தேசியக் கூட்டடைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினருமானஇரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்திருந்தார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

சுமார் 70 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மிதவாத கட்சிகள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கம்தான் தீர்வை முன்வைக்க வேண்டும் என வலியுறுத்தி வந்திருந்தன்.

ஆயினும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆரம்ப படியாக கொண்டு எமது மக்களுக்கான அரசியல் தீர்வை நோக்கி நகர்வதற்கு அதனை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தி வந்தது.

'ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்' என்ற போதும், யுத்தம் வலுவான உச்ச நிலையில் இருந்தபோதும் நாம் இதனையேவிடாப்பிடியாகவலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

ஐ.நா மனித உரிமை பேரவையும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறேகூறியிருக்கின்றது.

அரசியல்யாப்பில்உள்வாங்கப்பட்ட விடயமாக இருப்பதால் இதனை நடைமுறைப்படுத்துவதில் தடையேதும் இருக்கப்போவதில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஏனைய மிதவாத அரசியல் குழுக்களும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் 13 ஆவது அரசமைப்பை தும்புக்கட்டையால் கூட தொட்டுப்பார்க்க முடியாது என வீர முழக்கமிட்டனர்.

ஆனால் எமது தலைவர் டக்ளஸ்தேவானந்தா,மிகநீண்ட அரசியல் பார்வையுடனும் தீர்க்கதரிசனமாகவும் துல்லியமான முறையில் இலங்கை இந்தியஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் 13 ஆவது அரசமைப்பை செயற்படுத்தி அதிலிருந்து மேலும் நாம் அதிகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மிக தெளிவாக இருந்தார். அதனையே நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் நாடாளுமன்றத்திலும் வெளிநாடுகளின் தூதுவர்களிடமும் வலியுறுத்தியும் வந்திருந்தார்.

70 ஆண்டுகளுக்கு மேலான பழைமைவாத மிதவாத கட்சிகளும் பெரும் சட்டத்தரணிகளைக் கொண்டு அரசியல் நுட்பங்களை அறிந்த தத்துவ வித்தகர்களும் உள்ளதாகக் கூறப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இதுவரைகாலமும் எந்தவிதான அரசியல் தீர்வையோ அல்லது அரசியல் பொதியையோ முன்வைத்திருக்கவில்லை.

தன்னாட்சி, சுயநிர்ணயம், தேசியம் என பேசிக்கொண்டிருந்தார்களே தவிர தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வைத் தேடிக்கண்டுபிடிக்கவில்லை. அதற்கான திட்டமும் அவர்களிடம் இருந்திருக்கவில்லை. தேர்தல் அரசியலை மட்டுமே இலக்காகக் கொண்டு நாளொரு பொய்யும் பொழுதொரு புழுகுமாக வீறாப்பாகவும் ஆக்ரோசமாகவும் அறிக்கைவிட்டுக்கொண்டிருந்தனர்.

ஆனால், தற்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 30 ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்திவந்த வழிமுறையை பின்பற்றிய கூட்டமைப்பு நேரடியாக ஜனாதிபதியிடம் தமது நிலைப்பாட்டை முற்படுத்தியுள்ளனர்.

கடந்தகாலங்களில் கடைத்த பல வாய்ப்புகளைத் தவறவிட்டது போன்றல்லாது இந்த வாய்ப்பையாவது பயன்படுத்தி வெளிப்படைத் தன்மையுடனும் இதயசுத்தியுடனும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பங்காற்றுமாயின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிய அதனை முழுமையாக வரவேற்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

தொடர்புகளுக்கு: 0777 43 5557

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியஅமைப்பாளரும்,மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித் தார்.

வைத்தியர் விஸ்வலிங்கத்தின் நோய் நிவாரணி நிகழ்வு நேற்று நடைபெற்றபோத அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டு தேர்தல் வருடமாகும். அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. அரசமைப்பின் பிரகாரம்குறித்தகாலத்தில்ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும். ஏனைய தேர்தல்களைத் தள்ளிப்போட்டதைப்போன்று இதனையும் தள்ளிப்போட்டுவிட முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முட்டுக்கொடுத்துக்கொண்டிருக்கும் மொட்டுக் கட்சியினர் முரண்டுபிடித்தால் அதற்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலொன்றுக்குச்செல்வதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன.

ஜனாதிபதிதேர்தலில்தமிழர்கள் ஒன்றாக இருக்கவேண்டும். விசேடமாகவடக்கு,கிழக்குதமிழர்கள் நன்றாக அறிந்த ஒரு தமிழரை நிறுத்தி எங்களது ஒற்றுமையைக் காண்பிக்க வேண்டும். அவ்வாறு தமிழ் வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுகின்றபோது அவர் வெற்றிபெறவேண்டும்என்பதுஎமது நிலைப்பாடுஅல்ல. அதுதமிழர்களின் ஏகோபித்த ஒற்றுமையைக் காண்பிப்பதாகஅமையவேண்டும்.

மேலும்தற்போதையநிலையில் நான்கு முனைப் போட்டிகள் காணப்படுகின்றன. இந்த நிலைமைகள்நீடித்தால்எவருக்குமே வெற்றிக்கான சதவீதத்தினைக் கடப்பது கடினமானதாக இருக்கும்.

ஆகவே இரண்டாவது வாக்கு அங்கே முக்கியமானதாக இருக்கின்றது. அதனடிப்படையில் தமிழர் ஒருவரை வேட்பாளராக நியமிப்பதன் ஊடாக அந்த நிலைமையை உருவாக்குகின்றபோது நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறவுள்ள வேட்பாளருடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள முடியும் என்றார்.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு தெரிவித்தார்.

உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் மிகத் தெளிவாக நாட்டின் பொருளாதாரத்துக்கு யார் பொறுப்பாளிகள் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. அந்த தீர்ப்பினை தனது முத்திரையுடன் வெளியிட்டுமுள்ளது.

ஆகவே, பொதுமக்கள் நாட்டின் எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு அவர்களின் பின்னால் செல்வதா இல்லை வேறொரு தெரிவுக்குச் செல்வதா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

அதேநேரம், சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை கட்சியின் நிறைவேற்றுச் செயற்குழு கூடி ஆராய்ந்து தீர்மானிக்கும். என்னைத் தெரிவு செய்தால் நான் போட்டியிடுவேன். அதில் சந்தேகம் இல்லை. என்றார்.

## பண்டிகையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக பொலிஸார் உள்ளனர்.

யுத்திய சுற்றிவளைப்பில் கடந்த 06 நாட்களில் 12,132 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது 8 கிலோவிற்கும் அதிக ஹெரோயின், 4 கிலோகிராம் ஐஸ் மற்றும் 269 கிலோகிராம் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

636 சந்தேகநபர்களுக்கு தடுப்பு உத்தரவு பெறப்பட்டுள்ளதோடு 151 சந்தேகநபர்களின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் 998 சந்தேகநபர்கள் புனர்வாழ்விற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# பண வீக்க அதிகரிப்பினால் பெரும் கஷ்டத்தில் மக்கள்

## பேராசிரியர் எச்சரிக்கை



பணவீக்கம் அல்லது பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு வீதம் அடுத்த வருடத்தில் 5 வீதத்திற்குள் வைத்துக்கொள்வதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இருந்த போதிலும் இவ்வாறான பணவீக்கத்தை நாட்டு மக்களால் தாங்க முடியுமா என்பது நிச்சயமற்றது என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

தற்போதைய 1.6 சதவீத பணவீக்கத்தின் கீழ் கூட மக்கள் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை அளவுகள் தற்போது உச்சத்தை எட்டியுள்ளதாகவும், மேலும் அதிகரிக்க எதுவும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுவரை வரி விலக்கு அளிக்கப்பட்ட 97 வகையான பொருள்களுக்கு அடுத்த ஆண்டு முதல் 18 சதவீத புதிய வற் விதிக்கப்படவுள்ளதுடன், ஏனைய பொருள்களுக்கான வரியும் 3 சதவீதம் முதல் 18 சதவீதம் வரை அதிகரிக்கப்படும்.

இந்த வரிவிதிப்பால் இலங்கை மத்திய வங்கியின் பணவீக்கத்தை 5 வீதமாக பேண முடியுமா என்பது சந்தேகம் என கூறும் பேராசிரியர் மேலும் 5 வீதம் பணவீக்கம் ஏற்பட்டாலும் மக்கள் அதை சமாளிப்பது கடினம். எனவே, தற்போதைய பணவீக்க அளவை ஒரு சதவீதமாக குறைக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# இறக்காமத்தில் சடலம் மீட்பு இரு இளைஞர்கள் கைது

அம்பாறை மாவட்டம், இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாங்காமம் பகுதியிலுள்ள ஒரு வயல் காணியிலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களை கைது செய்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இனந்தெரியாத நபர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என சனிக்கிழமை காலை இறக்காமம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, மேலதிக விசாரணைகளை பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

உயிரிழந்தவர் அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த 63 வயது மதிக்கத்தக்க முஹம்மது சித்தீக் ஹாஜியார் என்பவரே என அடையாளம்காணப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் இரு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

வேலை ஒன்றை முடித்த பின்னர், அதற்கான கூலி கொடுப்பதில் ஏற்பட்ட தகராறே இந்தக் கொலைக்கு காரணமாக இருந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அத்துடன் இந்த கொலை கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்று, பின்னர், அருகிலுள்ள வீடொன்றில் சடலம் மறைக்கப்பட்டு, சனிக்கிழமை அதிகாலை வேளையில் கரும்பு காணிக்குள் வீசப்பட்டிருப்பது பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், கடந்த வெள்ளிக்கிழமை காலை வாங்காமம் பகுதியில் உள்ள தனது பண்ணையை பார்வையிடுவதற்காக சென்ற குறித்த நபர், வீடு திரும்பாத நிலையில், அவரை உறவினர்கள் தேடிச் சென்றபோதே இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிளிநொச்சியில் கசிப்பு உற்பத்தி: பொலிஸார் திடீர் முற்றுகை

கிளிநொச்சி-தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தர்மபுரம் பொலிஸாருக்குகிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக சந்தேகநபர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் வீட்டின் பின்புறமாக உள்ள தண்ணீர் தொட்டியை பயன்படுத்தி மறைவாக ஓரிடம் அமைக்கப்பட்டு அப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து பெருமளவு கசிப்பு கோடா பொலிஸாரால் அழிக்கப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவற்றுடன் 712 போத்தல் கோடாவும் 34 போத்தல் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் சந்தேக நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (05)






காலைக்கதிர் Kalaikkathir

# இங்கிலாந்தின் கழகமட்ட கிரிக்கெட் அணியில் யாழ்ப்பாண வம்சத்து யுவதிக்கு கிடைத்தது இடம்






யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட அமுருதா சுரேன்குமார் இங்கிலாந்தின் கழகமட்ட கிரிக்கெட் அணியில் தனக்கான இடத்தை தக்கவைத்துள்ளார்.

யாழ். காரைநகரை பூர்வீகாக கொண்ட அமுருதா சுரேன்குமார் இங்கிலாந்தின் சன்ரைஸ் அகடமி குழுவில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். 2024 ஆம் ஆண்டிற்கான சன்ரைஸ் அக்கடமி குழுவில், 15 வீராங்கணை களுக்கு வாய்ப்பளிக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவராகவே அமுருதா தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

நீண்டகால விரிவான தேர்வு செயல் முறையின் அடிப்படையில், குளிர்கால பயிற்சி திட்டத்தில் இத்தேர்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து பேர் கொண்ட அணி பின்வருமாறு:-

மோலி பார்பர்-ஸ்மித், ஒலிவியா பார்ன்ஸ், பிரிஷா பேடி, ஈவி புக்கர்,ஹன்னா டேவிஸ், மே டிரிங்கெல், இசபெல்லா ஜேம்ஸ், பெல்லா ஜான்சன்,லைலா , ஓலோரன்ா, சாரா பியர்சன், சார்லி பிலிப்ஸ், மாபெல் ரீட், ஹெர்ட்ஃபோர்ட்யைர் ரிவா பின்டோரியா, அமுருதா சுரேன்குமார். (05)

# 6 மாத பெண்குழந்தை மூச்சுத்திணறிச் சாவு

## யாழ்ப்பாணத்தில் சோகம்

மூச்சுத்திணறல் காரணமாக சனிக்கிழமை அதிகாலை ஆறு மாதங்கள் நிரம்பிய பெண்-குழந்தை ஒன்று யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளது.

திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கு குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

இதனால் பெற்றோர் குழந்தையை இரவு 12 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், சனிக்கிழமை அதிகாலை வேளையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டுள்ளதோடு, உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# பொலிஸாரின் நடவடிக்கைகளால் குற்றச்செயல்கள் குறைந்துள்ளன

## யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பெருமிதம்



யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும், விசேட நடவடிக்கையால் வாள்வெட்டு, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்கள் சடுதியாக குறைந்துள்ளன என யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

கடந்த சில தினங்களில் பொலி-ஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகளின்போது 100 இற்கும் அதிகமானவர்கள் கைதாகியுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் மேற்கொள்ளும் இந்த விசேட நடவடிக்கையால் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வந்த வாள்வெட்டு, வன்முறைகள், திருட்டு, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்கள் சடுதியாக குறைந்துள்ளன.

இந்த விசேட நடவடிக்கை எதிர்வரும் நாள்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. -என்றார். (05)

# யாழ். சுன்னாகத்தில் 8 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடி பகுதியில் வைத்து ஹெரோயினுடன் 34 வயது சந்தேக நபர் ஒருவர் சனிக்கிழமை கைது செய்-யப்பட்டுள்ளார்.

அத்துடன், அவரிடமிருந்து 8 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

பொலிஸாரை கண்டதும் சந்தேக நபர் தப்பி ஓட முயற்சித்துள்ள வேளையிலேயே சுன்னாகம் பொலிஸார் அந்நபரை மடக்கிப் பிடித்து கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, மேலதிக விசாரணைகளின் பின்னர், கைதானவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கதிரை மீதேறி தூசு தட்டிய முதியவர் தவறி விழுந்து பரிதாபமாகச் சாவு

அராலியிலுள்ள வீட்டில் தூசு தட்டுவதற்காக கதிரையின் மேல் ஏறிய முதியவர் ஒருவர் தவறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அராலி வடக்கு பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம்குறித்துமேலும்தெரியவருகையில்-

குறித்த நபர் வீட்டில் தூசு தட்டுவதற்காக கதிரையின் மேல் ஏறி தவறி கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்

இந்நிலையில் உறவினர்கள் உடனடியாக அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர்மரணவிசாரணைஅதிகாரிமேற்கொண்டதோடு, உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# வத்தளை - எலகந்தயில் ஒருவர் வெட்டி கொலை

## சந்தேகநபர் கைது

தொலைபேசி தரவுகளை பகுப்பாய்வு செய்ததன் மூலம் கொலைச் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி வத்தளை எலகந்த பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஒருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த வத்தளை பொலிஸார் சந்தேக நபரை சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

தொலைபேசி தரவு பகுப்பாய்வு அறிக்கைகள் மூலம் சந்தேக நபர் பற்றிய தகவல்களை உறுதிப்படுத்திய பின்னரே, கொழும்பு 15 பிரதேசத்தில் வசிக்கும் 29 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரை சோதனையிட்ட போது, அவரிடம் ஹெரோயின் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (05)



# 'யுக்திய' நடவடிக்கையின் முதற்கட்டமாக 7 நாள்களில் 13 ஆயிரத்து 666 பேர் கைது

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' நடவடிக்கையின் முதற்கட்டமாக கடந்த ஏழு நாள்களில் 13 ஆயிரத்து 666 சந்தேக நபர்கள் கைது செய்-யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் 717 சந்தேக நபர்கள் தடுப்பில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், சட்ட விரோத சொத்துக்கள் தொடர்பில் 174 சந்தேக நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், போதைக்கு அடிமையான 1,097 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# யாழில் போதைக்கு அடிமையாகி கைதான 20 இளைஞர்கள் புனர்வாழ்வு மையத்துக்கு

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் விசேட நடவடிக்கையின்போது கைதான 20 இளைஞர்களை புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விாந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பொலிஸாரால் கடந்த சில தினங்களாக முன்னெடுப்பட்டு வரும் விசேட நடவடிக்கையின்போது, போதைப்பொருளை கடத்தியமை, உடைமையில் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஹெரோயின் வைத்திருந்தவர்கள் 27 பேர், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தவர்கள் 04 பேர், கஞ்சா வைத்திருந்தவர்கள் 30 பேர் மற்றும் போதை மாத்திரைகளை வைத்திருந்தவர்கள் 27 பேராவர்.

மேலும், 20 பேர் போதைக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

அந்த 20 பேரையும் நீதிமன்றத்தில் முற்படுத்தி, நீதிமன்றம் ஊடாக போதை புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# 13 போதைப்பொருள் பாவனையாளர் உட்பட 250 பேர் முல்லைத்தீவில் 7 நாள்களில் கைது

## 25 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைப்பு

நாடளாவிய ரீதியில் போதை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்புகள், கைது நடவடிக்கைகள், போதைப்பொருள்கள் மீட்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாகவே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை 4.30 மணியளவில் முல்லைத்தீவில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவின் கள்ளப்பாடு, தீத்தக்கரை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கடற்கரைகளில் அமைக்கப்பட்டுள்ள வாடிகளில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது போதைப்பொருள் பாவனையாளர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6 நாள்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு, மாங்குளம், மல்லாவி, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வெலிஓயா, ஐயன்கன்குளம், நட்டாங்கண்டல், கொக்குளாய் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 3 கிராம் ஹெரோயின், 480 கிராம் ஐஸ், ஒரு கிலோ 855 கிராம் 39 மில்லி கிராம் கேரள கஞ்சா, 5 கஞ்சா செடிகள், 48 கிராம் வேறு வகையான போதைப்பொருள்கள், 443 லீற்றர் கசிப்பு, 1797 லீற்றர் கோடா உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன.

அதேவேளை, போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் 2 பெண்களும் 111 ஆண்களுமாக 113 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் 25 பேர் புனர்வாழ்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலைய தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள்கள் விற்பனை

## மருந்தகத்தின் உதவியாளர் கைது



பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்பனை செய்யும் மருந்தகம் ஒன்றின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

வாதுவ, மாவல பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாதுவ, பொதுப்பிட்டிய பிரதேசத்திலுள்ள மருந்தகம் ஒன்றில் உதவியாளராகக் கடமையாற்றும் சந்தேக நபர் போதைப்பொருள் விற்பனை செய்வதாக களுத்துறை வடக்கு பொலிஸ்நிலையபிரதானபொலிஸ் பரிசோதகர் தமித் ஜயதிலகவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்தே குறித்த நபர் வஸ்கடுவ பிரதேசத்துக்கு அழைக்கப்பட்டு போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)



# காட்டு யானையையும் மரத்தையும் மோதி விபத்துக்குள்ளானது பஸ்

## நால்வர் காயம்

தனியார் பயணிகள் பஸ் ஒன்று காட்டு யானையுடன் மோதியதில் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இப்பலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகஇலுப்பள்ளம விதை ஆராய்ச்சி நிலையத்துக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.20 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கெக்கிராவையிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த பயணிகள் பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விதை ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில்தங்கியிருந்தகாட்டுயானை மீண்டும்வனப்பகுதிக்குசெல்வதற்காக வேலியை உடைத்துக்கொண்டு வீதிக்கு வந்தபோது இந்த பஸ் மோதி கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச்சம்பவத்தில்சாரதி, நடத்துநர் உட்பட 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை இப்பலோகம பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (05)

# மாத்தறை சிறைச்சாலையில் நோய்வாய்ப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை 16 ஆக அதிகரிப்பு

மாத்தறை சிறைச்சாலையில் நோய் அறிகுறிகளுடன் இருந்த மேலும் 8 கைதிகள் சனிக்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என சிறைச்சாலை ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, மாத்தறை பொது வைத்தியசாலையில் தற்போது 16 கைதிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களில் இருவர் தொடர்ந்தும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சிறைச்சாலை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் மாத்தறை சிறைச்சாலையில் 8 கைதிகள் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் உயிரிழந்தமை தெரிந்த விடயமே.

இந்நிலையில், உயிரிழந்த கைதியின் மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (05)

# கண்டி தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தவருக்கு கொவிட் உறுதி

மூச்சு விடுவதில் சிரமம் மற்றும் நுரையீரல் தொற்று காரணமாக கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்அவரதுமரணத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது அவருக்கு கொவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக கண்டி தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

கம்பளை அத்கல பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொவிட் நோய்த் தொற்று முடிவுக்கு வந்து நீண்ட நாள்களுக்குப் பின்னர், இலங்கையில் இந்த மரணம் புதிதாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது ஒமிக்ரோன் வைரஸ் பரவி வருவதை டாக்டர்ஜீவந்தா உறுதிப்படுத்தியுள்ளார். (05)

# மன்னம்பிட்டி பாலத்துக்குள் குடைசாய்ந்தது வாகனம்

பொலன்னறுவையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்துகொண்டிருந்த டிப்பர் ரககூலர் வாகனமொன்று ஞாயிற்றுக்கிழமை விபத்தில் சிக்கியுள்ளது.

ஞாயிறு நண்பகல் மன்னம்பிட்டியில் உள்ள பாலத்துக்கருகில் வைத்து வாகனத்தின் டயர் வெடித்ததில் பாலத்துக்குள் குடைசாய்ந்துள்ளது.

எனினும், வாகன சாரதியின் துரித செயற்பாடு காரணமாக எவருக்கும் உயிராபத்து ஏற்படாத நிலையில், மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்விபத்து காரணமாக இந்த பாலத்தின் ஊடான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டதையடுத்து, இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.12.2023இல் வெளியிடப்பெற்றது.